எள்ளளவுகூட ஐயம் இல்லை. ஆகவே, இதில் எந்த இடத்திலாவது ஏதாவது குறையிருந்தால் அதை மட்டும் குறிப்பிட்டுக் கேட்டால் நாங்கள் பதில் சொல்ல முடியுமே தவிர, பொதுவாக எல்லா இடங்களிலேயும் இடஒதுக்கீடு, அது கோ-ஆப்டெக்ஸ்-ஆக் இருந்தாலும், ஹேன்லூமாக இருந்தாலும் அது கடைபிடிக்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி, தாழ்த்தப்பட்டோருக்கான பணி இடஒதுக்கீடு பின்பற்றப்படுகிறதா என்பதுதான். பின்பற்றப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள்.

திரு. ஜி. பழனிசாமி: எத்தனை சதவீதம்? 500 பேர் வேலை பார்க்கிறார்கள் என்றால், அந்த 500 பேரில் எத்தனை சதவீதம்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: எத்தனை சதவீதம் இடஒதுக்கீடு என்பது உங்களுக்குத் தெரியாதா? தாழ்த்தப்பட்ட மக்கள் என்றால் 18 சதவீதம் இடஒதுக்கீடு இருக்கிறது. அந்த இடத்தை அப்படியே பின்பற்றியிருக்கிறது துறை. இல்லையென்று சொன்னால் அவர்கள் கோர்ட்டுக்கு வழக்கு தொடர்வதற்கு போய் இருப்பார்கள். இதுவரை சரியான முறையிலே நாங்கள் கொடுத்திருக்கிற காரணத்தினாலேதான் கோ-ஆப்டெக்ஸில் வேலை பார்க்கக்கூடிய யாரும் கோர்ட்டுக்குச் செல்லவில்லை. இந்த நடைமுறையை இந்த அரசு சரியாக பின்பற்றியிருக்கிறது.

முற்பகல் 10-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மொத்த எண்ணிக்கை வேண்டுமானால் அதற்கு தனிக் கேள்வி போடவும்.

வினா எண் 233, திரு. என். ஆர். சிவபதி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர்.

233—

தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் விசைத்தறிகள் அமைத்தல்

23536*—திரு. என். ஆர். சிவபதி:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொட்டியம் தொகுதி, தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் விசைத்தறிகள் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

1995 ஏப்ரல் 5]

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொட்டியம் தொகுதி தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் விசைத்தறி அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்த முன்னாள் முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் தாத்தையங்கார்பேட்டை வேஷ்டியைப் பயன்படுத்தினார்கள். மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும் தாத்தையங்கார்பேட்டை வேஷ்டிகளைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். அந்த அளவுக்குப் பெருமை வாய்ந்த வேஷ்டிகளும் மற்றும் துணி வகைகளும் வெளி மாநிலங்கள் மற்றும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டு விற்பனை ஆகும் அளவுக்கு இருக்கிறது. அந்த விற்பனையைப் பெருக்கும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விசைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது என்பது, அதாவது அவர்கள் வெறும் ஜனதா வேஷ்டியை மட்டும் உற்பத்தி செய்கிற காரணத்தால் அரசு அளிக்கிற சிறப்புத் திட்டங்களின் மூலமாக மட்டுமே உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதனால் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு தொழில் கொடுக்க இயலாமல் போய், நிர்வாகச் செலவினங்களை ஈடுகட்ட இயலாத சூழ்நிலை ஏற்பட்டுவிடுவதால் சங்கங்கள் மூடப்படுகிற நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஆகவேதான் இதைப் பரிசீலனைக்கு ஏற்றுக்கொள்ள இயலாது என்பதை நான் தெரிவித்தேன். அதுமட்டுமல்லாமல் தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் விசைத்தறித் தொழிற்கூடம் அமைக்கக் கூடிய அளவுக்கு இடம் ஏதும் சரிவர இல்லை என்பதும் ஒரு காரணம். அப்பகுதியில் கைத்தறி மட்டுமே அதிகமாக இயங்கி வருகிறது. விசைத்தறிகளும், விசைத்தறி நெசவாளர்களும் இல்லை. எனவே அப்பகுதியில் பிரதம விசைத்தறி நெசவாளர்கள் கூட்டுறவுச் சங்கம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. மேலும் விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதியுதவி அளிக்க மத்திய கூட்டுறவு வங்கிகள் முன்வருவதில்லை. ஆகவே இவற்றை எல்லாம் வைத்துப் பார்க்கிறபோது தொட்டியம் தொகுதி தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் அவர்களுக்காக விசைத்தறிக் கூட்டுறவுச் சங்கம் அமைக்கக்கூடிய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[*1995 ஏப்ரல் 5*

திரு. என்.ஆர். சிவபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள் ஏற்கனவே இந்தத் தொகுதியில் நெசவாளர்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் அங்கே சாயத் தொழிற்சாலை சென்ற ஆண்டு கொடுத்திருக்கிறார்கள். அந்த அளவுக்கு நெசவாளர்கள் அங்கு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். மேலும் இன்றைக்கு செய்தித்தாளில்கூட 95 சதவீதம் விசைத்தறிகளிலிருந்து உற்பத்தியாகிற துணிகள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதியாகின்றன என்று செய்திகள் வந்திருக்கின்றன. அந்த அளவுக்கு வருகிற நிலையிலும் தொட்டியம் ஒன்றியத்தில் மணல்மேடு, கூடியாம்பாளையம் மற்றும் தாத்தையங்கார்பேட்டை ஒன்றியங்களில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அதிகமாக இருப்பதாலும் இப்பகுதியில் விசைத்தறியையும் ஏற்படுத்தினால் இந்தத் தொழில் சிறப்பாக அமையும். தொழில் தெரிந்தவர்கள் அதிகம் பேர் அங்கே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இந்தத் தொழில் முன்னேற்றம் அடையும். ஆகவே இந்தத் தொழிலை மேலும் வளர்க்கும் வகையில் தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் வருகிற காலங்களிலாவது விசைத்தறிகள் அமைப்பதற்கு அரசு முன்னுரிமை வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குக் காலையில் பத்திரிகையில் விசைத்தறி ஏற்றுமதி பற்றி வந்திருக்கிற செய்தியைச் சொன்னார்கள். நம்முடைய தமிழக அரசைப் பொறுத்தமட்டில் மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், கைத்தறித் துறையின் மூலம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதே நெசவாளர்களுக்கு அதிகப் பயன் விளைவிக்கும் என்று நம்புகிறார்கள். அந்த வகையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறைய அமைக்கப்படுகின்றன. ஆனால் விசைத்தறிக் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்தால் அதிலே இலாபம் ஏற்படுவதில்லை. கைத்தறி நெசவுத் தொழிலும் அழிந்துவிடக்கூடாது என்கிற அடிப்படையில் கைத்தறி நெசவாளர்களை அதிகமாக ஊக்குவிக்கிறோம். எனவே தாத்தையங்கார்பேட்டை ஒன்றியத்தில் நெசவாளர்கள் அதிகமாக இருந்தால் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பது பற்றி அரசு பரிசீலனை செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 234, திரு. ஏ.கே.சி. சுந்தரவேல், மாண்புமிகு பிற்பட்டோர் நலத் துறை அமைச்சர்.